[24th April 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Nine.

(*b*) Two.

(*c*) Yes, Sir.

(*d*) The Public Works Department has been asked to provide diesel pumpsets for lifting water.

SRI K. R. VISWANATHAN : ஆழக்குழாய் கிணறுகளில் தண்ணீர் . . . .

MR. SPEAKER : The hon. Member must be a little loud. I cannot hear him. He can come to the mike.

SRI K. R. VISWANATHAN : இந்த ஆழக் குழாய் கிணறுகளில் இரண்டில் தாகை தண்ணீர் வருகிறது. அந்தத் தண்ணீரிலிருந்து பயிர் செய்யும் குடியானவர்கள் எக்கருக்கு 75 ரூபாய் வரி கட்ட வேண்டுமென்று சொல்லி சென்ற ஆண்டில் வசூலித்தார்கள். அதுபற்றி அவர்கள் ஆட்சேபனை கிளப்பி சர்க்காருக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்கள். கலெக்டர் அவர்கள் சிபார் செய்து . . . .

MR. SPEAKER : How does this question arise out of the original question?

SRI K. R. VISWANATHAN : சர்க்கார் இதுபற்றி.........

MR. SPEAKER : I have already asked, how does this question arise out of the original question which reads—

(*a*) how many deep bore-wells were sunk in Udayarpalayam taluk, Tiruchirappalli district;

(*b*) from how many wells there is an automatic flow of water;

(*c*) whether there are any possibilities of lifting water from the remaining wells; and

(*d*) if so, what action is being taken by the Government about this?

But the hon. Member is referring to a different matter and therefore I rule it out of order.

SRI K. R. VISWANATHAN : இந்தக் குழாய் கிணறுகளிலிருந்து பாசன வசதி செய்து கொடுப்பதற்கு..............

MR. SPEAKER : I have already ruled it out of order. Next question.

Madras State Tamil Development and Research Council

* 133 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. VINAYAKAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state when the Madras State Tamil Development and Research Council is expected to submit its report or recommendations?

24th April 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM : The Tamil Development and Research Council has not been constituted for the purpose of making any specific report or recommendation. The Council will function continuously and has been constituted for the development of Tamil language in all its aspects, including the co-ordination of the measures taken by the Official Language Act Implementation Committee within its own field with all other measures for the development of the Tamil language.

SRI K. RAMASUBBU : இந்தக் கழகத்தை தமிழகத்தில் வைத்து நடத்தினால் மிக நன்றாக இருக்கும். அது பற்றி ஆலோசிக்கப்படுமா ? (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM : தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கழகம் சென்னையில் இருந்து இயங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்தக் காலத்தில் அரசாங்கம் இங்கேயே இயங்க ஏற்பாடு செய்யப்படுகிறதோ, அப்பொழுது இந்தக் கழகமும் இங்கே இயங்கும்.

SRI N. R. THIAGARAJAN : தமிழ் வளர்ச்சியைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர்கள் கேசவன், கோபாலன் போன்ற வார்த்தைகளுக்கு சரியான தமிழ் வார்த்தைகளை எப்படி கண்டு பிடிப்பார்கள் ? கோபாலன் என்றால் மாட்டுக்காரன் என்று அர்த்தமாகுமே. அதற்குக் தகுந்த தமிழ்ச் சொல்லை கண்டுபிடிக்க முடியுமா ? (சிரிப்பு.)

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த கழகத்திற்கு சர்வ கலாசாலைகளில் தமிழை போதனு மொழியாகக்கொண்டு வருவதற்கு வழி வகை வகுப்பதற்கு ஏதாவது அதிகாரம் உண்டா ? இந்தக் கவுன்சில் மெம்பர்கள் சர்வகலாசாலைகளை ஆலோசித்து நியமிக்கப்பட்டார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கழகத்திலே சென்னை, அண்ணாமலை சர்வகலாசாலைகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறார்கள். தமிழ் மொழியை பாட மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது பற்றி ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு சமீபத்திலே வெளியிடப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு இரண்டு சர்வகலாசாலைகளின் உப அத்தியக்ஷகர்களைப் கூப்பிட்டு, ஆலோசனை கேட்டு அவர்களுடைய சம்மதத்தின் பேரில் தான் அந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : இந்தக் குழு இதுவரைக்கும் கூடியிருக்கிறதா. இதுவரைக்கும் அவர்கள் செய்திருக்கக்கூடிய பணிகளைப்பற்றி சுருக்கமாகச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கழகம் மூன்று தடவைகள் கூடியிருக்கிறது என்று என்னுடைய ஞாபகம். முதல் முதலில் எடுத்திருக்கக்கூடிய தீர்மானம் தமிழை பாடமொழியாக்க வேண்டுமென்பது தான். பி.ஏ. வகுப்பில் தமிழை பாட மொழியாக்க வேண்டுமென்பதற்காக ஒரு திட்டம் வகுத்து, அதை அடுத்த ஆண்டிலிருந்து ஒரு கல்லூரியில் பரீட்சார்த்தமாக நடத்திப் பார்க்கவேண்டும் என்கின்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் தமிழினுடைய வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு, அந்தத் திட்டங்களை உருவாக்குவதற்கு சில உப கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அந்த உப கமிட்டிகள் சீக்கிரமாக திட்டங்களை சமர்ப்பிக்கும்பொழுது, அவைகளைப் பரிசீலனை செய்து, அதற்கு மேல் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது பற்றி முடிவு செய்யப்படும்.

[24th April 1959

SRI V. K. KRISHNAMURTHY : பல்கலைக் கழகத்திற்கு உரிய கலைப் பொருள்களை மொழிபெயர்ப்பதில் இந்தக் குழு ஈடுபடுமா ? அப்படி ஈடுபடு மானால் எத்தகைய புலவர்களை நியமிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம்?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம், தமிழிலேயே எல்லா விதமான பாடங்களும் சொல்லிக் கொடுப்பதற்கு பின்னாலே ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கும். ஆனால், உடனடியாக இப்பொழுது பி.ஏ. வகுப்பிற் குள்ள பாடங்களை மட்டும் தமிழிலே சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பது திட்டம். பி.எஸ்.ஸி குள்ள விஞ்ஞான பாடங்களை தமிழில் போதிப்பது பற்றி பின்னால் ஆலோசிக்கலாம் என்கின்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது. விஞ்ஞான சம்பந்தமான கலைச் சொற்களை எந்த விதத்தில் மாற்றி அமைக்க வேண்டுமென்பதுபற்றி தமிழுக்கு மட்டும் ஒரு முடிவு எடுத்து பிரயோசனம் இல்லை. இந்தியாவில் இருக்கும் எல்லா மொழிகளுக்கும் பொதுவாக இருக்கக்கூடிய ஒரு முறையில் ' இண்டர்நேஷனல் டர்ம்ஸை ' உபயோகப்படுத்தினால் சௌகரியமாக இருக்கும் என்று எல்லோரும் அபிப் பிராயப்படுகிறார்கள். அந்த முறையில் கூடிய சீக்கிரம் நடவடிக்கை எடுக் கப்படும்.

SRI A. A. RASHEED : What is the term of the members of this Council? Are they life-members?

THE HON. SRI C. SUBRAMANIAM : As long as they continue to serve.

SRI T. S. RAMASWAMY PILLAI : பி.ஏ. வகுப்பில் விஞ்ஞானம் இல்லாத விஷயங்களுக்கு தமிழிலேயே சொல்லிக் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். தத்துவ சாஸ்திரம், தர்க சாஸ்திரம் இவைகளுக்கு தகுந்த பாடப் புத்தகங்கள் இருக்கின்றனவா ? இப்பொழுது இந்தத் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வரும்பொழுது பாடப்புத்தகம் இல் லாததினால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது இவைகளுக்கு பாடப்புத்தகங்கள் இல்லை. அதனால்தான் ஒரு வருஷம் கழித்து இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது பற்றி ஆராய்ந்து முடிவு செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அங்கத் தினர் அவர்கள் பி.ஏ. வகுப்பில் இருக்கக்கூடிய தத்துவம், சரித்திரம், பூகோளம் போன்ற பாடங்கள் தமிழிலேயே போதிக்கப்படுவதுபற்றி சொன் னார்கள். இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்ட பி.ஏ. வகுப்பில் விஞ்ஞா னமும் ஓரளவுக்கு சொல்லிக் கொடுக்கப்படும். அந்த விஞ்ஞான பாடம் தமிழிலேயே சொல்லிக் கொடுக்கப்படும். தத்துவம், சரித்திரம், பூகோளம் போன்ற பாடங்கள் ஓரளவுக்கு இப்பொழுது பி.எஸ்.ஸி. வகுப்பிற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பாடங்கள் பி.எஸ்.ஸி. வகுப்பைப் பொறுத்தவரையில் பூராவும் ஆங்கிலத்திலேயேதான் சொல்லிக் கொடுக் கப்படும். பி.ஏ. வகுப்பைப் பொறுத்தவரையில் எல்லாம் தமிழிலேயே இருக்க வேண்டுமென்பதுதான் திட்டம்.

B.C.G. Vaccination

* 134 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of B.C.G. vaccination done each year during 1956, 1957 and 1958; and